**தலைப்பு 334 பல்நோக்கு அபிவிருத்தி செயலணித் திணைக்களம்**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

தலைப்பு - 334 பல்நோக்கு அபிவிருத்தி செயலணித் திணைக்களத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் பல்நோக்கு அபிவிருத்தி செயலணித் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2023 மே 24 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களம் தொடர்பான வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2023 ஜூன் 26 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

பல்நோக்கு அபிவிருத்தி செயலணித் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்களின் 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான பல்நோக்கு அபிவிருத்தி செயலணித் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தர்களதும் பொறுப்பு**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாகப் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன், அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தன்மையை இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றை பெற்றுக் கொள்ளும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும், நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம், பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் தொடர்பான எனது பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டுள்ளன.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் தயார்ப்பது தொடர்பாக கணக்காய்வாளரின் அதவானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

**(அ) மூலதன செலவினம்**

நிதிக்கூற்றுக்களிற்குரிய மூலதன செலவுகளை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டில் 2102 வீட்டுத் தளபாட மற்றும் அலுவலக உபகரண செலவினம் ரூபா 33,200 ஆன போதும், அது ஏசீஏ 2(i) நிகழ்சித் திட்டம் பிரகாரம் செலவின கூற்றில் ரூபா 50,700 ஆக ரூபா 17,500 கூடுதலாக காட்டப்பட்டிருந்தது. | வீட்டுத் தளபாட மற்றும் அலுவலக உபகரண கொள்வனவிற்கு வேறு திணைக்களமொன்றிற்கு விடுவிக்கப்பட்ட ஏற்பாடு மூலம் மேற்கொண்ட ரூபா 17,500 ஆன கொள்வனவும் உள்ளடங்களாக ஏசீஏ - 02(i) நிகழ்சித் திட்டம் பிரகாரம் ரூபா 50,700 என காட்டப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்தது. | உண்மையான செலவுகளை கணக்கீடு செய்ய பொறுப்பேற்க வெண்டும். |
| (ii) | ஏசீஏ 2(ii) செலவு கூற்றில் நி.பி.208 கீழ் ஏனைய திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட செலவாக ரூபா 17,500 காட்டப்பட்டு இருந்த காரணத்தால் ஆண்டின் செலவினம் அப் பெறுமானத்தால் கூட்டிக் காட்டப்பட்டிருந்ததுடன் சேமிப்பு அப்பெறுமானத்தால் குறைத்து காட்டப்பட்டிருந்தது | மேலே இல்ககம் (i) இல் காட்டப்பட்டவாறு ஏனைய திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட செலவு நிதியல்லா சொத்துக்கள் கூற்றில் உள்ளடக்கப்படாததுடன் அதனை 2023 ஆண்டில் சீராக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக காட்டப்பட்டிருந்தது. | நிதிக்கூற்றுக்களில் சரியான பெறுமானங்களை காட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### (ஆ) ஆவணங்கள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

திணைக்களத்தினால் பின்வரும் சில பதிவேடுகள் பேணப்படாதிருந்ததுடன், சில பதிவேடுகள் முறையாக மற்றும் நாளாதுவரையாக பேணியிருக்காமை மாதிரி கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 110 பிரகாரம் சேதம் தொடர்பான பதிவேடொன்று நாளாதுவரையாக பேணியிருக்கவில்லை. | இத் திணைக்களம் 2020 ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட புதிய திணைக்களமொன்றாவதால் மற்றும் 2022 வரை சேதம் அல்லது நட்டம் அறிக்கையிடப்படாததால், சேதம் அல்லது நட்ட பதிவேடொன்றை பேணிச் செல்லாததுடன் 2023 ஆண்டில் சேத மற்றும் நட்ட பதிவேடொன்றை ஆரம்பிக்க அலுவலர்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணம் 110 இன் ஏற்பாடுகள் பிரகாரம அதன் கீழான படிவம் பிரகாரம் சேதம் பற்றிய பதிவேடொன்றை பேணிச் செல்ல வேண்டும். |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 செலவு முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீண்டெழும் 05 செவின விடயங்களிற்காக ஏற்பாடு ரூபா 5,204,665,000 இலிருந்து ரூபா 4,869,727,593 சேமிக்கப்பட்டிருந்ததுடன் அந்த சேமிப்பு 31 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையான வீச்சளவை எடுத்திருந்தது. | 2022 ஆண்டிற்காக பாதீட்டை தயாரிக்கும் போது அதன் போது ஆட்சேர்த்திருந்த 33,714 பலநோக்கு அபிவிருத்தி உதவியாளர்களை நிரந்தரமாக்கி 2022 ஆண்டினுள் நிரந்தர சம்பளம் வழங்கவும், 2022 ஆண்டில் இன்னும் 35,000 உதவியாளர்களை ஆட்சேர்த்து அவர்களிற்கான 06 மாதகால் பயிற்சியின் பின்னர் அவ்வாண்டிலேயே நிரந்தர சம்பளம் வழங்கவும், அந்த உதவியாளர்களின் அடையாளத்தை உறுதி செய்ய சீருடை வழங்கவும், உதவியாளர்களை பயிற்றுவிக்கும் போது மற்றும் நிரந்தரமாக்கும் போது மேற்கொள்ள வேண்டிய அதற்கு அன்டிய மீண்டெழும் செலவுகளிற்காக மதிப்பீடு தயாரிக்கப்பட்ட போதும், தேசிய பாதீட்டு சுற்றறிக்கை 03/2022 ஊடாக புதிய ஊழியர் ஆட்சேர்ப்பு பிற்போடலும், ஆட்சேர்த்திருந்த உதவியாளர்களுக்கு | வருடாந்த ஏற்பாட்டை உச்ச வினைத்திறனுடன் பயன்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | நிரந்த நியமனம் வழங்குதல் இடம்பெறாமையின் மீது மதிப்பிடப்பட்ட மீண்டெழும் செலவுகளில் கூடிய சதவீதம் சேமிக்கப்பட்டுள்ளதாகவும் காட்டப்பட்டிருந்தது. | |
| (ஆ) | மூலதன 04 செவின விடயங்களிற்காக ஏற்பாடு ரூபா 8,500,000 இலிருந்து ரூபா 8,088,426 சேமிக்கப்பட்டிருந்ததுடன் அந்த சேமிப்பு 79 சதவீதம் முதல் 99 சமவீதம் வரையான வீச்சளவை எடுத்திருந்தது. | தேசிய பாதீட்டு சுற்றறிக்கை 03/2022 ஊடாக அரச செலவுகளை கட்டுப்படுத்த வழங்கியுள்ள ஆலோசனையின் மீது காணப்பட்ட மூலதன சொத்துக்களின் மூலம் தேவையான முகாமைத்துவத்தை மேற்கொண்ட காரணத்தால் மதிபீடப்பட்டதன் பிரகாரம் ஏற்பாட்டை பயன்படுத்தாததுடன் அதன் பிரகாரம் ஏற்பாடு சேமிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | வருடாந்த ஏற்பாட்டை உச்ச வினைத்திறனுடன் பயன்படுத்த வேண்டும். |
| (இ) | 2022 ஏப்ரல் 26 திகதிய இலக்கம் 03/2022 கொண்ட தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் 3(xvii) பந்தி பிரகாரம் ஆண்டினுள் செலவு மேற்கொள்ள ஒதுக்கப்பட்ட ஏற்பாட்களில் சேமிப்பு காணப்படின் அதனை ஆண்டு முடிவடைய முன்னர் ஏனைய செலவினங்களிற்காக பயன்படுத்தக் கூடாதெனினும், 12 செலவு விடயங்களில் ரூபா 150,000 முதல் ரூபா 1,000,000,000 வரை 12 சதவீதம் முதல் 116 சதவீதம் வரையான ஏற்பாட்டு மாற்றிக் கொள்ளப்பட்டிருந்தது. | 2022 ஆண்டினுள் திட்டமிட்டவாறு பலநோக்கு அபிவிருத்தி உதவியாளர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கியதன் மீது அவர்களுக்கு ஆண்டு முழுவதும் பயிற்சி படிகளை செலுத்த நேரிட்டதும், எரிபொருள், நீர், மின்சாரம் மற்றும் தொடர்பாடல் சேவைகளின் கட்டணங்கள் துரிதமாக அதிகரித்தமை போன்ற விடயங்கள் ஆண்டினுள் செலவின விடயங்களிற்கு இடையில் ஏற்பாட்டை மாற்றிக் கொள்ள வேண்டி ஏற்பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளிற்கு இணங்கி நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளிற்கு உட்படல்

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் (இணைப்பு iii) கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் மீதான கூற்றிற்கு இணங்க பொறுப்புக்கள் ரூபா 191,824,434 ஆன போதும், பொறுப்புக்களை விஞ்சி ரூபா 3,176,327 தொகை செலுத்தப்பட்டு இருந்தது. | மீளாய்வாண்டின் பொறுப்புக்கள் அந்த ஆண்டினுள் பொறுப்புக்கள் கூற்றிற்கு உட்படுத்த போதிய ஏற்பாடு அந்த அந்த செலவின விடயத்தின் கீழ் இருக்காததால் பொறுப்புக்கள் கூற்றிற்கு உட்படுத்தாத போதும் நடைமுறை ஆண்டின் ஏற்பாடுகள் மூலம் அப் பொறுப்புக்களை சீராக்கியுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | அனைத்து பொறுப்புக்களையும் வெளிப்படுத்தவும் காட்டியுள்ள பொறுப்புக்களை மாத்திரம் தீர்க்கவும் பொறுப்பேற்க வெண்டும். |

**2.3 வங்கிக் கணக்கு செயற்பாடுகள்**

வங்கிக் கணக்கு செயற்பாடுகள் தொடர்பாக மேற்கொண்ட மாதிரி கணக்காய்வு பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட குறைபாடுகள் பின்வருமாறு.

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்கள வங்கி நடைமுறைக் கணக்கில் 2022 திசெம்பர் 31 திகதியன்று வங்கிக் கூற்றின் பிரகாரம் மீதி ரூபா 29,190,089 ஆன போதும் நிதிக்கூற்றில் இணைப்பு (viii) இல் வங்கி கூற்று பிரகாரம் மீதி ரூபா 29,040,089 ஆக ரூபா 150,000 குறைத்து காட்டப்பட்டிருந்தது. | 2022 ஆண்டில் திசெம்பர் மாத வங்கி இணக்கக் கூற்றை தயாரிக்கும் போது தவறுதலாக ரூபா 150,000 தேறாத வைப்பாக கருதியதன் மீது வங்கிக் கூற்றில் மீதி ரூபா 29,040,089 ஆக நிதிக்கூற்றில் இணைப்பு (viii) இல் காட்டப்பட்டுள்ளது. சரிசெய்யப்பட்ட வங்கி இணக்க அறிக்கை தற்போது கணக்காய்விற்கு சமர்பித்துள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | நிதிக்கூற்றுக்களில் தரவுகளை சரியாக முன்வைக்க வேண்டியமை. |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 எதிர்பார்த்த வெளியீட்டு மட்டத்தை அடைந்து கொள்ளாமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஒரு இலட்சம் தொழில்கள் நிகழ்சித் திட்டத்தின் கட்டம் 1 இன் கீழ் 2020 இல் ஆட்சேர்கப்பட்ட 34,605 நியமனதாரர்கள் NAITA நிறுவனத்தின் பயிற்சி நிகழ்சித் திட்டத்தில் பங்குபற்றியிருந்ததுடன் பயிற்சி முடிவில் இவற்றில் 1,592 பேர்கள் விலகியிருந்தனர். | முதலாம் கட்டத்தின் கீழ் 2020 இல் ஆட்சேர்கப்பட்ட நியமனதாரர்கள் 34,605 ஆனதுடன் பயிற்சி முடிவில் அவற்றில் 1,592 அளவினர் விலகியிருந்ததுடன் அது 4.6 சதவீதமாகுமென காட்டப்பட்டிருந்தது. | பயிலுனர்கள் விட்டுச் செல்வதில் திணைக்கள எதிர்பார்த்த நோக்கம் அடையப் பெறாததால் விட்டுச் செல்வதனை குறைக்க பொருத்தமான செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். |
| (ஆ) | ஒரு இலட்சம் தொழில்கள் நிகழ்சித் திட்டத்தின் கட்டம் 2 இன் கீழ் 3,544 யானை வேலி பராமரிப்பு உதவியாளர்கள் NAITA நிறுவனத்தின் பயிற்சி நிகழ்சித் திட்டத்தில் பங்குபற்றியிருந்ததுடன் பயிற்சி முடிவில் இவற்றில் 94 பேர்கள் விலகியிருந்தனர். | இரண்டாம் கட்டத்தின் கீழ் யானை வேலி பராமரிப்பு உதவியாளர்களாக ஆட்சேர்கப்பட்ட நியமனதாரர்கள் 3,544 ஆனதுடன் பயிற்சி முடிவில் அவற்றில் 94 பேர்கள் விலகியிருந்தனர் அது 2.6 சதவீதமாகுமென காட்டப்பட்டிருந்தது. | பயிலுனர்கள் விட்டுச் செல்வதில் திணைக்கள எதிர்பார்த்த நோக்கம் அடையப் பெறாததால் விட்டுச் செல்வதனை குறைக்க பொருத்தமான செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். |

**3.2 அரச உத்தியோகத்தர்கன் பிணை வைத்தல்**

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகிறது.

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணம் 880 பிரகாரம் பிணை வைக்க வேண்டிய அரச உத்தியோகத்தர்கள் பிணை வைத்திருக்கவில்லை. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணம் 880 பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.3 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஒரு இலட்சம் தொழில்கள் நிகழ்சித் திட்டத்தின் கீழ் 2022 திசைம்பர் 31 திகதிக்கு ஆட்சேர்க்கப்பட்ட பயிலுனர்கள் 38,375 ஆனதுடன் அவற்றிலிருந்து விலகிய மொத்த பயிலுனர்களின் எண்ணிக்கை 7,317 ஆனது. இப் பயிலுனர்களிற்காக ஒருவருக்கு ஒருமாதத்திற்கு செலுத்திய ரூபா 22,500 வீதமான செலவு விளைவற்ற செலவாக ஆகியிருந்தது. இந்த விலகிய பயிலுனர்கள் 7,317 இற்காக ஒரு மாத படிகள் ரூபா 164.63 மில்லியன்களாகும். | ஒரு இலட்சம் தொழில்கள் நிகழ்சித் திட்டத்தின் கீழ் 2022/12/31 திகதியன்று ஆட்சேர்க்கப்பட்ட பயிலுனர்கள் 38,375 இலிருந்து விலகிய எண்ணிக்கை 7,317 ஆவதுடன் அவர்கள் பயிற்சி கால எல்லையில் பல சந்தர்ப்பங்களில் பல காரணங்களிற்காக விலகிச் சென்றுள்ளர். அவர்கள் பயிற்சியின் முதலாம் மாதத்தில் கொள்கைரீதியான பயிற்சியின் பின்னர் அரசின் நானாவித நிறுவனங்களில் சேவையாற்ற இணைக்கப்பட்டுள்ளதால் அவர்களிற்கு செலுத்தப்பட்ட மாதாந்த படிகளிற்காக அவர்களினால் அந் நிறுவனங்களிற்கு சேவை வழங்கியுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | பயிலுனர்கள் விட்டுச் செல்வதில் திணைக்கள எதிர்பார்த்த நோக்கம் அடையப் பெறாததால் விட்டுச் செல்வதனை குறைக்க பொருத்தமான செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். |

**4. மனிதவள முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அங்கீகார ஆளணியில் சிரேஷ்ட மட்டத்திலிருந்து ஆரம்ப மட்டம் வரை அனைத்து மட்டங்களிலும் வெற்றிட 28 சதவீதம் முதல் 100 சதவீதம் வரை காணப்பட்டது. | 2022/04/26 திகதிய தேசிய பாதீட்டு சுற்றறிக்கை இலக்கம் 03/2022 இன் ஏற்பாடுகள் பிரகாரம் புதிய பதவிகளிற்கு அனைத்த ஆட்சேர்ப்புக்களையும் பிற்போட்டப் பட்டதனால் இத் திணைக்களத்தின் அங்கீகார ஆளணியில் சிரேஷ்ட மட்டத்திலிருந்து ஆரம்ப மட்டம் வரை அனைத்து மட்டங்களிலும் காணப்பட்ட வெற்றிடங்களை நிரப்புதல் மீளாய்வாண்டினுள் இடம் பெறவில்லை என அறிவிக்கப்பட்டிருந்தது. | வெற்றிடங்களை நிரப்பிக் கொள்வது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும். |